சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 23.02.2024 <u>SC.113/2021</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கதிரேசன் | தொழில் | : | |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : | |
| விலாசம் | : | | | | |

**அ.சா.15**

---

முதல் விசாரணை

நான் தற்போது குமுளி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2018ம் தேதி கூடலூர் தெற்கு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 9.00 மணிக்கு தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, குள்ளப்பகவுண்டன்பட்டி, PVK தெருவைச் சேர்ந்த நடராஜ்முருகன் என்பவரது மகன் N.M.சாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.55/2018 சட்டப்பிரிவு 120(b), 307, 109 இ.த.ச. பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.16. அசல் புகார் மனு முதல் தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தமபாளையத்திற்கும் உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்புகளை கூடலூர் வட்ட ஆய்வாளர் ஷாஜகான் என்பவரது மேல்விசாரணைக்காக ஒப்படைத்தேன். ஆய்வாளர் சுரேஷ்குமார் அவர்கள் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை</u>

அ.சா.1 சாமி என்னிடம் புகார் கொடுக்கும்போது உடல்நிலை சரியில்லாமல் இருந்தாரா என்றால் இரண்டு நபர்கள் அவரை கைப்பிடித்து அழைத்து வந்தார்கள். நான் மேற்படி நபர்களிடம் முதல் தகவல் அறிக்கையில் சாட்சி கையொப்பம் எதுவும் வாங்கவில்லை. நான் சொல்வதுபோல் சாமி என்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்தார்.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 23.02.2024 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | நவபிரசாத் | தொழில் | : |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.16**

---

முதல் விசாரணை

நான் தற்போது உத்தமபாளையம் மதுவிலக்க அமலாக்கப்பிரிவில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கூடலார் தெற்கு காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது கடந்த 25.03.2018ம் தேதி குள்ளப்பகவுண்டன்பட்டி நடராஜ்முருகன் என்பவர் மகன் சாமி என்பவர் கொடுத்த புகார் சம்மந்தமாக குற்ற எண்.55/2018 பிரிவு 120(b), 307, 109 இ.த.ச. பிரிவின் படி வழக்கு பதிவு செய்து வழக்கு சம்மந்தமாக கனம் உத்தமபாளையம் நீதித்துறை நடுவர் நீதிபதி அய்யா அவர்களிடம் கடிதம் பெற்றேன். க.விலக்கு தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மருத்துவப் பேராசிரியரிடம் ஆஜர் படுத்தினேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

அ.சா.1 சாமியை நான் மருத்துவப் பரிசோதனைக்கு அழைத்துச் செல்லும்போது அவருடன் வேறு யாரும் வரவில்லை. நான் உத்தமபாளையம் நீதித்துறை நடுவரிடம் அனுமதி கடிதம் பெற்று மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். ஆனால் மருத்துவர் என்ன மருத்துவ சம்மந்தமாக ஆய்வுக்கு சென்றேன் என்றால் எனக்கு தெரியாது.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 23.02.2024 SC.113/2021

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாண்டியன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : | | வயது | : |
| விலாசம் | : | | | |

**அ.சா.18**

---

முதல் விசாரணை

நான் சம்பவத்தின்போது கே.எம்.பட்டியில் கார்த்திக் என்பவரது வீட்டின் அருகே குடியிருந்து வந்தேன். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு நானும் கார்த்திக் என்ற பையனும் லாரி டிரைவராகவும் கன்டக்கராகவும் வேலை பார்த்தோம். நாங்கள் வேலை விட்டு திரும்பி போகும்போது சாமி கடைக்கு எனது அண்ணன் கடை என்று கார்த்திக் என்னை கூட்டிச் சென்றார். அப்படி கடைக்கு போய் வரும்போது எனக்கு சாமி என்பவர் நன்றாக பழக்கம் ஏற்பட்டது. அதன்பிறகு எனக்கு போன் வந்தது. அதன்பிறகு கார்த்திக் சாமி என்பவருக்கு உடல்நிலை சரியில்லை என்று போன் மூலம் தகவல் சொன்னார். நான் சொந்தமாக கார் ஒன்று வைத்திருந்தேன். அந்த காரில் மதுரை மீனாட்சி மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றோம். அப்போது நானும் சாமி அண்ணன், அவருடைய மனைவி, கார்த்திக் ஆகியோர் மருத்துவமனைக்கு சென்றோம். அப்போது டாக்டர் யாரோ ஹெவிடோஸ் மாத்திரை கொடுத்துள்ளார் என்று கார்த்திக்கிடமும் சாமி மனைவியிடமும் சொன்னதாக பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு நான் கார் பாாக்கிங் சென்று விட்டேன். அவர்கள் அங்கே பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பிறகு அன்று இரவு அங்கேயே தங்கிவிட்டோம். அதன்பிறகு ஒரு வாரம் ஆகும் என்பதால் நானும் கார்த்திக்கும் ஊருக்கு வந்துவிட்டோம். அதன்பிறகு 15 நாட்கள் கழித்து லேப்புக்கு கூட்டிச்சென்று ரத்தப்பரிசோதனை செய்யப் போவதாக சொன்னார்கள். நான் காரில் சென்று அங்கு அவர்களை இறக்கிவிட்டு வந்துவிட்டேன். அதன்பிறகு அந்த சோதனையில் சுலோபாய்சன் எதோ கலந்திருப்பதாக சொன்னார்கள். அதன்பிறகு கார்த்திக் என்பவர் என்னிடம் அக்கா சுகந்தி ஏமாற்றிவிட்டார்கள். அண்ணனுக்கு துரோகம் பண்ணிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதன்பிறகு அவர்களை இந்த வழக்கு சம்மந்தமாக எதிரிகளை கைது செய்ய வேண்டும் என காரை எடுத்து வரச்சொன்னார்கள். நானும் காரை எடுத்துப்போனேன். அப்போது சுதாகர் என்பவரையும்

சுகந்தி என்பவரையும் கைது செய்தார்கள். சுதாகரை குள்ளப்பகவுண்டன்பட்டியில் வைத்தும் சுகந்தியை ஆனைமலையன்பட்டியில் வைத்து கைது செய்தும் கம்பம் காவல்நிலையத்திற்கு கூட்டிச்சென்றார்கள். அங்கு நான் இறக்கிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குு.வி.

சாமிக்கு சுலோபாய்சன் கொடுத்தாக கார்த்திக் என்னிடம் கூறினார். சுதாகரையும் சுகந்தியையும் கைது செய்யும்பொது நான் காரில் சென்று கொண்டு இருந்தேன். அப்போது போலிசார் அங்கு நிறைய இருந்தார்கள். என்னையும் அழைத்துச் சென்றுதான் அவர்களை கைது செய்தார்கள். சாமி எனக்கு நல்ல பழக்கம். நான் சொல்வது போல் எந்த வழக்கும் நீதிமன்றத்தில் இல்லை என்றும், சாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சார்பு நீதிமன்றம், உத்தமபாளையம்

நாள்: 23.02.2024 SC.113/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | உமாதேவி | | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : | | | வயது | : |
| விலாசம் | : | | | | |

**அ.சா.19**

---

முதல் விசாரணை

நான் தற்போது தேனி Q.பிரிவு புலனாய்வுத்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 25.03.2018ம் தேதி தேனி சைபர் கிரையம் பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கூடலூர் வட்ட காவல் ஆய்வாளரிடமருந்து வரப்பெற்ற கூடலூர் தெற்கு காவல் நிலைய குற்ற எண்.55/2018 பிரிவ 120(b), 307, 109 இ.த.ச. வழக்கு சம்மந்தமாக வேண்டுதல் கடிதம் பெற்று மேற்படி வழக்கின் எதிரி சுதாகர் என்பவர் பயன்படுத்தி வந்த செல்போன் எண்களான 9655519766, 6382146387, 9498187113 மற்றும் அதன் IMAI எண்களான 862588031875611, 862588031875603 ஆகியவற்றிற்கு வரப்பெற்ற மற்றும் சென்ற அழைப்புகள் மற்றும் தகவல் பரிமாற்றங்களையும் மேற்படி மொபைல் எண் சிம் கார்டில் உரிமைதாரரின் பெயர் மற்றும் முகவரியையும சம்மந்தப்பட்ட Mobile Service Provider நிறுவனத்திலிருந்து தகவலைப் பெற்று ஆய்வு செய்ததில் 862588031875611-ல் வேண்டுகோள் கடிதத்தில் குறிப்பிடாத 8248829887 என்ற எண்ணுள்ள சிம்கார்டை 688 முறை எதிரி சுதாகர் என்பவர் மற்றொரு எதிரியான சுகந்தி என்பவரின் மொபைல் எண்.9788977750 என்ற எண்ணிற்கும் எதிரி சுதாகரின் BSNL எண்ணான 9498187113 என்ற எண்ணை 41 முறை எதிரி சுகந்தி என்பவரின் 9788977750 என்ற எண்ணிற்கு தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது என்ற அறிக்கை வனைகிறேன். அந்த கால் விபரங்களை நான் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன். மேலும் இவ்வழக்கு தொடர்புடைய மற்ற எதிரிகளான பாண்டியராஜன் தொலைபேசி எண்ணான 9688119115 மற்றும் மணிவண்ணன் என்பவரின் தொலைபேசி எண்ணான 9750678035 ஆகிய எண்களுக்கு எதிரி சுகந்தி என்பவரின் மற்றொரு தொலைபேசி எண்ணான

9095909500 என்ற என்ற எண்ணிற்கும் வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்ற அறிக்கையையும் புலன்விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறு.வி.

விசாரணை அதிகாரி வேண்டுகோள் கொடுக்கும் செல்போன் எண்களை ஆய்வு செய்து அது தொடர்பான call detail வழங்குவோம். ஆனால் இந்த வழக்கில் விசாரணை அதிகாரி கேட்காத எண்ணையும் ஆய்வு செய்து அறிக்கை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. அவர் கேட்ட அலைபேசி எண்ணுக்கு வந்த அனைத்து கால்களுக்கும் வந்த அழைப்புகளை ஆய்வு செய்து கொடுத்தேன். எந்த நபருடைய குரல் பதிவும் எங்களுடைய call data record-ல் வராது. நான் ஆயவு செய்ததாக சொல்லப்படும் செல்போனை கைப்பற்றி அதிலிருந்து பரிமாற்றம் செய்யப்பட்ட பதிவுகளை பதிவிறக்கம் செய்து ஆய்வாளரிடம் கொடுக்கவில்லை. call detail மட்டும் கொடுத்தேன். நான் எந்தவொரு ஆய்வும் மேற்படி அலைபேசி எண்களை ஆய்வு செய்யவில்லை என்றும், எங்கள் துறையைச் சேர்ந்த ஆய்வாளர் கேட்டுக்கொண்டதால் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஆய்வு செய்த call data record ஆய்வை ஆய்வாளரிடம் ஒப்படைக்கவில்லை என்றும், சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல.